1972 மார்ச் 3]

அடுத்து, எழுத்துப் பணிக்கு அதிக அலவன்ஸ் கேட்டிருக்கிறார்கள். ஏற்கெனவே ஐந்து ரூபாய் தரப்படுவதை பத்து ரூபாயாகத் தரவேண்டும் என்று தீர்மானித்திருக்கிறது. அவர்களுடைய சங்கத்திற்குக் கட்டடம் கட்ட சென்னையில் ஓர் இடம் தேவை என்று கேட்டிருக்கிறார்கள். அவ்வாறு பல்வேறு சங்கங்கள் கேட்டிருப்பதால் மொத்தமாகப் பரிசீலிக்கப்பட வேண்டிய நிலையில் அது இருக்கிறது.

சூலூரிலுள்ள அரசு மருத்துவ மனை

* 278 வினா—திரு. கே. என். குமாரசாமி : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

பல்லடம் வட்டம், சூலூரில் உள்ள அரசாங்க ஆஸ்பத்திரியை விஸ்தரித்து 24 படுக்கைகள் அதிகப்படுத்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : இல்லை.

திரு. கே. என். குமாரசாமி : சூலூர் பிரதேசம் முக்கிய சென்டராக இருப்பதால் அங்குள்ள அரசாங்க ஆஸ்பத்திரியில் ஒரு ஆபரேஷன் தியேட்டரை அமைப்பதோடு, படுக்கைகளின் எண்ணிக்கையையும் அதிகப்படுத்த அரசு முன்வருமா? அங்குள்ள மக்களுக்கு மிகவும் சிரமங்கள் ஏற்பட்டுக் கொண்டிருப்பதால் அந்த ஆஸ்பத்திரியை விஸ்தரிக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, சூலூருக்காக வாதாடுவதற்கு அதை 'பிரதேசம்' என்று சொல்லி விட்டார்கள். அந்தப் பிரதேசத்திலேயே கோயம்புத்தூரில் மாபெரும் மருத்துவ மனை இருக்கிறது. சூலூர் வட்டமும் கோயம்புத்தூர் பிரதேசத்தைச் சேர்ந்தது தான். ஆனால், சூலூரில் மருத்துவ மனை விஸ்தரிக்கப்பட வேண்டுமென்றால், சிறிய அளவு உடைய அந்த இடத்தில் அந்த அளவுக்குத்தான் இன்றைக்கு அரசாங்கத்தால் அமைக்க முடியும். அதற்கு மேற்பட்டு அமைக்க பொருளாதார நிலை இடம் தராது.

திரு. என். மருதாசலம் : தலைவர் அவர்களே, கோவை மருத்துவ மனையில் படுக்கைகளின் எண்ணிக்கைக்கேற்ப போர்வைகள் இல்லை. 90 படுக்கைகளுக்கு 90 போர்வைகள் தேவை. அதைக் கொடுக்க அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா?

[1972 மார்ச் 3

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மூலக் கேள்வி ' சூலூரிலுள்ள அரசு மருத்துவ மனையைப் பற்றியது. இந்தத் துணைக் கேள்வி அனுமதிக்கப்படவில்லை.

கீழத்தூவலில் ஆரம்ப சுகாதார நிலையத்துக்குக் கட்டடம்

* 179. வினா—**திரு. எஸ். காதர் பாட்சா என்ற வெள்ளைச்சாமி :** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராமநாதபுரம் மாவட்டம், முதுகுளத்தூர் ஊராட்சி ஒன்றியம் கீழத்தூவல் என்னும் ஊரில் பிரதம சுகாதார நிலையத்திற்கு புதுக் கட்டடம் கட்டும் திட்டம் அரசு பரிசீலனையில் உள்ளதா ?

(இ) ஆம் என்றால், அந்தக் கட்டடம் எப்போது செயல் படும் ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) இல்லை.

(இ) இக் கேள்விக்கு இடமில்லை.

திரு. எஸ். காதர் பாட்சா என்ற வெள்ளைச்சாமி : நீண்ட கால மாக கீழத்தூவலில் ஆரம்ப சுகாதார நிலையம் ஆரம்பிக்கப்பட்டும் கட்டடம் இல்லாத பெருத்த கஷ்டமான நிலையில் இருக்கிறது. ஆகவே, அங்கு ஆரம்ப சுகாதார நிலையத்திற்கான புதிய கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, ஆரம்பச் சுகாதார நிலையம் அங்கே ஆரம்பிக்கப்பட்டது 1967-ம் ஆண்டில். எந்த ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் ஆரம்பிக்கப்பட்டு செயல்பட்டாலும், கட்டடம் கட்ட ஏறத்தாழ இரண்டு லட்ச ரூபாய் தேவை. அந்த இரண்டு லட்ச ரூபாய் அரசாங்கம் செலவழிப்பதென்பது—ஆண்டுக்கு பத்து அல்லது இருபது ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கான கட்டடங்கள் கட்டுவது என்ற அடிப் படையில் ஏறத்தாழ 150 முதல் 200 வரை கட்டடங்கள் கட்டி முடிக்கப்பட்டு விட்டன. இன்னும் 200 இடங்களில் கட்டி முடிய வில்லை. கீழத்தூவலில் ஐந்தரை ஏக்கர் அரசாங்கப் புறம்போக்கு நிலம் கிடைத்திருக்கிறது. ஆனால், அதற்காகப் பஞ்சாயத்து ஒன்றியமோ அல்லது பொது மக்களோ பத்தாயிரம் ரூபாய் கட்ட வேண்டும். அது இதுவரையில் கட்டப்படவில்லை. அது